பக்கம்–

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.4/2023**

**அ.சா. –11( காட்டுராஜா)**

**நாள். 08.08.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.</u>**

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் இறந்து போனவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனக்கும் எவ்வளவு காலம் பழக்கம் என்றால் சுமார் 4 ஆண்டுகள் பழக்கம் இருக்கும். இறந்து போன சென்ராயனும் நானும் ஒன்றாகத்தான் வேலைக்கு போய் வருவோம். சென்ட்ராயனுக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தது எனக்கு தெரியாது. இறந்து போனவருக்கும் அவரது அப்பாவுக்கும் மேலும் அவரது தாய்மாமாவுக்கும் இடையே சொத்து பிரச்சனை இருந்தது வந்தது என்கடு தெரியாது. என் ஊர் அழகம்பட்டி ஆகும். இறந்து போன சென்ட்ராயன் ஊரான குருமபபட்டிக்கும் அழகம்பட்டிக்கும் இடையே சுமார் 11 கிமீ இருக்கும். இறந்து போனவரின் பைனான்ஸ் பிரச்சனை சம்மந்தமாக நான் எதுவும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. நான் ஜம்புதுறை கோட்டையின் பஞ்சாயத்து தலைவராக பணி செய்தேன் என்றால்தவறு., என் மனைவிதான் செய்தார். என் மனைவி ஒருமுறைதான் பஞ்சாயத்து தலைவராக இருந்தார். 2021 ஆம் ஆண்டிலிருந்து 2025 வரை பஞ்சாயத்து தலைவராக என் மனைவி இருந்தார். அரசியல் கட்சியில் நான் 15 ஆண்டுகளாக நான் பணி செய்கிறேன் என்றால் சரிதான். என் மீதும் மணல் திருட்டு போன்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். என் மீது எத்தனை முதல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டது என்றால் பதிவு செய்யப்படவில்லை.முன்ஜாமீன் நான் பெறவில்லை. என் மீது காவல்துறை வழக்கு பதிவு செய்து முன் ஜாமீன் பெற்றிருக்கிறேன் என்பதை நீதிமன்றத்தில் மறைக்கிறேன் என்றால் தவறு. நான் அடிதடி பஞ்சாயத்துகளில் ஈடுபட்டு வருவதால் போலிசாருடன் நெருக்கமாக இருந்து வருகிறேன் என்றால் தவறு. என் மனைவி பஞ்சாயத்து தலைவராக இருப்பதால் என் ஊரில் ஏதாவது பிரச்சனை என்றால் காவல்நிலையத்திற்கு நான் போய் வருவேன் என்றால் தவறு. சென்ராயன் வீட்டிற்கு சம்பவத்தன்று காலையில் 06.00 அல்லது 07.00 மணிக்கு போயிருந்தேன். நான் அங்கு போவதற்கு முன்பே போலிசார் அங்கே இருந்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. சென்ராயன் வீட்டிலிருந்து சென்ராயன் இறந்த உடலை நான் போவதற்கு முன்பே அப்புறப்படுத்தியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் என்னை போலிசார் விசாரிக்கவில்லை. நானும் எனக்கு தெரிந்த எந்த சங்கதியையும் போலிசிடம் சொல்லவில்லை. சென்ராயன் குடும்பத்தினரிடமும் நான் என் தகவலும்

சொல்லவில்லை. சென்ராயன் இறந்து 3 நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சென்ராயன் இறந்து 4 மாதங்கள் கழித்து என்னை போலிசார் முதன் முதலில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் இடைய 9 கிமீ தூரம் இருக்கும். சென்ராயன் இறந்த பின்பு அவரது வீட்டை வீடியோ எடுப்பதற்காக நான் போனபோது என்னுடன் ஒருவர் வந்தார் .அவர் பெயர் ஞாபகம் இல்லை. மேற்படி வீடியோ எடுத்த பிறகும் அந்த வீடியோவை பற்றி சென்ராயன் குடும்பத்தாரிடம் நான் தெரிவித்தேன். சென்ராயன் இறந்த பிறகு 3 ,4 நாட்கள் கழித்து அந்த வீடியோவை பற்றி அவரது குடும்பத்தாரிடம் தெரிவித்தேன். மேற்படி விவரங்களை அவரது குடும்பத்தாரிடம் தெரிவித்த விவரத்தை போலிசார் என்னை விசாரித்த போது தெரிவித்தேன். எடுத்த வீடியோவை சென்ராயன் குடும்பத்தாருக்கு நான் போட்டு காண்பித்தேன் என்றால் சரிதான். அந்த வீடியோவின் நகலை கிராம அதிகாரிக்கோ அல்லது வேறு அதிகாரிகளுக்கோ நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சென்ராயன் வீட்டிற்கு அருகில்தான் அந்த கிராமத்தின் கிராமம நிர்வாக அலுவலர் வசித்து வந்தார் என்பது எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்து வருகிறார்கள் என்ற விவரம் அவர் இறந்த 4 நாட்கள் கழித்து எனக்கு தெரிய வந்தது. சென்ராயன் குடும்பத்தார் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் எடுத்த வீடியோவை நகல் எடுத்த கம்ப்யூட்டர் கடை காவல் நிலையத்திலிருந்து 50 அடி தூரத்தில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த கடையில் நான் சிடியை பதிவு செய்தது சென்ராயன் இறந்த பிறகு 3 நாள் கழித்து என்றால் சரிதான். என் செல்போனையும் அதில் உள்ள மெமரி கார்டையும் போலிசார் விசாரணையில் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கணிணி கடையில் பதிவு செய்த பிறகு பதிவு செய்த வீடியோவுக்குரிய பென்டிரைவும், சிடியும் எனக்கு கொடுத்தார்கள். வீடியோ பதிவை போலிசில் உடனடியாக கொடுத்தேனா என்றால் 4 மாதங்கள் கழித்து கொடுத்தேன். நான் 4 மாதங்கள் கழித்து வீடியோவை கொடுத்த ஆய்வாளர் ஆண் ஆய்வாளர் ஆவார். என்னை விசாரித்ததும், ஆண் ஆய்வாளர் ஆவார். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் , சொன்ன விதத்தில் வீடியோ எடுக்கவில்லை என்றாலும் மேற்படி வீடியோ போலிசாரால் போலியாக திரித்து உருமாற்றம் செய்து வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் போலிசாருக்கும் அடிக்கடி தொடர்பு உண்டு என்றும் என் மீது வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும், பஞ்சாயத்து பேசி சம்பாதிக்கும் நோக்கில் போலிசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு பஞ்சாயத்துகளில் வீடியோ இருப்பதாக சொல்லி பணம் பறித்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக மேற்படி வீடியோ போலிசாரால் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும் வீடியோவுக்கும், வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி தாக்கல் செய்யப்பட்ட வீடியோ சட்டத்தால் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மேற்படி குறுக்கு விசாரணையை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.08 07:36:15 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.